# வேளாண்மை

## பொதுவான போக்குகள்

1989 இல் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்த வேளாண்மைத் துறை 1990 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மீட்சியைக் காட்டியது. சாதகமான வானிலை நிலைமைகளும், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்நாட்டுக் குழப்பங்கள் குறைவடைந்தமையும் இவ்வரவேற்கத்தக்க செயலாற்றத்திற்கான முக்கிய உதவு காரணிகளாக இருந்தன. 1990 இல் தேயிலை உற்பத்தி 13 சத வீதத்தினால் கணிசமாக அதிகரித்து முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த மட்டத்தை அடைந்தது. 1990 இல் இறப்பர், தெங்கு உற்பத்திகள் முறையே 3 சதவீதத்தினாலும் 2 சதவீதத்தினாலும் சிறிதளவாக அதிகரித்த வேளையில் நெல் உற்பத்தி 23 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. சீனி உற்பத்தி 6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. சிறு உணவுப் பயிர்களினதும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறையினதும் திருந்திய செயலாற்றமும் வேளாண்மைத்துறை மீட்சிபெற உதவியிருக்கிறது.

## முக்கிய ஏற்றுமதிப் பயிர்கள்

### தேயிலை

கடந்த 10 ஆண்டு காலமாகச் சராசரியாக 2,050 இலட்சம் கிலோக் கிறாம்களுக்கிடையே தளம்பலுற்று வந்த தேயிலை உற்பத்தி 1990 இல் கணிச மாக மீட்சிபெற்று 2,330 இலட்சம் கிலோக்கிறாம்களை அடைந்து முன்னெப் பொழுதுமில்லாத உயர்ந்த மட்டத்தைப் பதிவு செய்தது. இக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்குச் சாதகமான வானிலை நிலைமைகளும் உள்நாட்டுக் குழப்பங்கள் குறைவடைந்தமையுமே முக்கிய காரணங்களாகும். தாழ்நிலப் பிரதேசங்களிலுள்ள பெருந்தோட்டங்களில் உற்பத்தி முழுமையாக மீட்சியடைந்தமையும், சார்பு ரீதியில் உயர்ந்த விலைகளைக் கவனத்திற் கொண்டு சிறந்த பயிர்ச்செய்கை நடைமுறைகள் பின்பற்றப்பட்டமையும் உற்பத்தியில் ஏற்பட்ட இவ்விரிவாக்கத் திற்கு உதவியிருக்கலாம். உற்பத்தியில் ஏற்பட்ட மீட்சி அனைத்து மூன்று உயரவகைகளிலும் காணப்பட்டதெனினும் 27 சதவீதமான மிக உயர்ந்த உற் பத்தி அதிகரிப்பினைக் கொண்டிருந்த தாழ்நிலப் பிரதேசங்களிலேயே மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. 1990 இல் தாழ்நிலத் தேயிலை உற்பத்தி 1,050 இலட்சம் கிலோக்கிறாம்களாக அமைந்து முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டத்தினைப் பதிவு செய்தது. உயர்நில, மத்திய நில தேயிலை உற்பத்திகள் முறையே 3 சதவீத, 4 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. ''மரபுவழி'' தேயிலை (லோபறி முறையில் பதனிடப்பட்ட தேயிலை உட்பட) உற்பத்தி 2,280 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 12 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1990 இல் மொத்தத் தேயிலை உற்பத்தியில் ஏறத்தாழ 2 சதவீதத்திற்கு வகை கூறும் வெட்டிக் கிழித்துச் சுருட்டப்பட்ட தேயிலை உற்பத்தி 57 இலட்சம் கிலோக் கிறாம்களுக்கு 35 சதவீதத்தினால் அதிகரித்தது.

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.9

## தேயிலைத் துறையின் மீதான புள்ளி விபரங்கள் 1988 — 1990

| விடயம் | அலகு | 1988 | 1989(அ) | 1990(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப. இ. கி. கிராம்கள் | 226.9 | 207.0 | 233.2 |
| 1.1. உயர்நிலம் | ,, | 76.8 | 74.1 | 76.1 |
| 1.2. மத்திய நிலம் | ,, | 54.3 | 50.0 | 51.9 |
| 1.3. தாழ்நிலம் | ,, | 95.8 | 82.9 | 105.1 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு | '000எக்டேயர்கள் | 222 | 221 | 222 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் | 000மெ.தொன்கள் | 138.0 | 127.9 | 134.3 |
| 4. மீளப்பயிரிடல் | எக்டேயர்கள் | 1,592 | 1,551 | 1,586 |
| 5. விலைகள் | | | | |
| 5.1. கொழும்பு தேறிய | ரூபா/கி.கி. | 41.59 | 52.16 | 65.72 |
| 5.2. ஏற்றுமதி க. எ. பெ. | ,, | 55.95 | 66.91 | 91.78 |
| 6. உற்பத்திக்கான செலவு | ,, | 43.98 | 49.70 | 57..65 |
| 7. ஏற்றுமதிகள் | ப. இ. கி. கி. | 219.8 | 204.2 | 216.0 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் | (ரூ. ப. இ.) | 12,298.7 | 13,663.9 | 19,823.3 |
| | (சிஎஉ. ப. இ.) | (288) | (296) | (364) |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) | | 5.1 | 4.5 | 4.4 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினதும் இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் இணைந்த உற்பத்தி (வாங்கப்பட்ட இலை களிலிருந்து தயாரிக்கப்பட்ட தேயிலை உட்பட) 1,390 இலட்சம் கிலோக் கிறாம்களுக்கு ஏறத்தாழ 5 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தமையின் காரண மாக நாட்டின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் அவை தொடர்பான பங்கு 1989 இன் 64 சதவீதத்திலிருந்து 1990 இல் 60 சதவீதத்திற்குக் குறைவடைந் தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினால் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களின் தேயிலை உற்பத்தி 720 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களின் தேயிலை உற்பத்தி 670 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 5 சதவீதத்தினால் விரிவடைந்தது. 1990 இல் தனியார்துறையின் தேயிலை உற்பத்தி 940 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 27 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந் தது. தனியார் துறையினால் உற்பத்தி செய்யப்பட்டு இரு அரசதுறைப் பெருந் தோட்டக் கூட்டுத்தாபனங்களுக்கும் சொந்தமான தொழிற்சாலைகளில் பத னிடப்பட்ட பச்சைத் தேயிலையையும் உள்ளடக்கும் பொழுது மொத்தத் தேயிலை உற்பத்தியில் தனியார்துறையின் பங்கு 44 சதவீதத்திலிருந்து 49 சதவீதத்திற்கு உயர்வடைந்துள்ளது.

1990 இல் தேயிலைத் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 134,287 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் 1990 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் முகாமைப்படுத்தப்படும் தேயிலைத்

தோட்டங்களின் வளமாக்கிப் பாவனை 38,599 மெற்றிக் தொன்களுக்கு 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குட்பட்ட பெருந்தோட்டங்களின் வளமாக்கிப் பாவனை 22,209 மெற்றிக் தொன்களுக்கு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில், 1990 இல் தனியாருக்குச் சொந்தமான தேயிலை நிலங்களின் வளமாக்கிப் பயன்பாடு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. சார்புரீதியில் உயர்வான தேயிலை விலைகளும் தனியாளுக்குச் சொந்தமான தேயிலை நிலங்களின் மீதான அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டினை ஊக்குவித்திருக்கலாம்.

1990 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களின் சராசரி விளைச்சல் எக்டேயர் ஒன்றிற்கு 1,315 கிலோக்கிறாம்களுக்கு 6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குட்பட்ட பெருந்தோட்டங்களின் சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 1,136 கிலோக்கிறாம்களுக்கு ஏறத்தாழ 2 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

1990 இல் தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப் பரப்பு 221,758 எக்டேயர்களாக மதிப்பிடப்பட்டு 1989 இனை விட 648 எக்டேயர்கள் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு முழுவதும் தனியார் துறையிலேயே பிரதிபலிக்கப்பட்டது. 1990 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களுக்கும் சொந்தமான தேயிலைத் தோட்டங்களின் கீழான பரப்பளவு முறையே 56,491 எக்டேயர்களுக்கும், 50,705 எக்டேயர்களுக்கும் சிறிதளவினால் வீழ்ச்சியடைந்தது. 1990 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களில் பயிரிடப்பட்ட பரப்பளவு 51,990 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் அதிகரித்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அத்தகைய நிலப்பரப்பு 45,923 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

1990 இல் மீளப் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1,586 எக்டேயர்களாக விளங்கி 2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1990 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினாலும் தனியார்துறையினாலும் மீளப் பயிரிடப்பட்ட பரப்பளவு முறையே 611 எக்டேயர்களுக்கும் 362 எக்டேயர்களுக்கும் 3 சதவீதத்தினாலும், 12 சதவீதத்தினாலும் உயர்வடைந்தவேளையில் 1990 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினால் மீளப் பயிரிடப்பட்ட பரப்பளவு 613 எக்டேயர்களுக்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1990 இல் புதிய பயிரிடுகையின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பளவு 1,753 எக்டேயர்களாக விளங்கி 1989 இனைவிட 575 எக்டேயர்கள் அல்லது 49 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. 1990 இல் தனியார் துறையில் 1,647 எக்டேயர்கள் புதிதாகப் பயிரிடப்பட்டமையினால் இவ்விரிவாக்கம் முழுவதும் அத்துறையிலிருந்து கிடைத்தது. இது முன்னைய ஆண்டைவிட 63 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். புதிய பயிரிடலின் உயர்ந்த மட்டம் சிறு உடமையாளர்களைச் சிறப்பாகக் கொண்டிருந்த தாழ்நில வளர் பிரதேசங்களிலேயே பெருமளவிற்கு குவிந்து காணப்பட்டது. சார்புரீதியில் உயர்ந்த தேயிலை விலைகளும் சாதகமான வானிலை நிலைமைகளும் ஆசிய அபி

விருத்தி வங்கியினால் உதவி வழங்கப்பட்ட தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் அதிகரித்த பயிர்ச்செய்கை நடவடிக்கைளுடன் இணைந்து தனியார் துறையின் புதிய பயிரிடலில் ஏற்பட்ட உயர்ந்த மட்ட அபிவிருத்திக்கான முக்கிய உதவு காரணிகளாக விளங்கின. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினால் புதிதாகப் பயிரிடப்பட்ட பரப்பளவு *1989* இன் *56* எக்டேயர்களிலிருந்து *1990* இல் *45* எக்டேயர்களுக்கு வீழ்ச்சியுற்ற வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் புதிய பயிரிடல் பரப்பளவு *1989* இன் *111* எக்டேயர்களிலிருந்து *1990* இல் *61* எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

*1990* இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதியதொரு உதவுதொகைத் திட்டத்தின்படி தேயிலையை இறப்பருடன் இடைப் பயிராகப் பயிர் செய்வதற்கு எக்டேயரொன்றிற்கு ஏறத்தாழ ரூ. *46,000* உதவுதொகைக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது. *1990* இன் பல்வேறு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான உதவுதொகை வீதங்கள் மாற்றமின்றியிருந்தன. பல்வேறுபட்ட திட்டங்களின் கீழ் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட உதவுதொகைகளின் மொத்தத் தொகை *1989* இன் ரூ. *710* இலட்சத்திலிருந்து *1990* இல் ரூ. *790* இலட்சத்திற்கு அதிகரித்தது.

தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபை சிறு உடைமையாளர்களுக்கான உதவுதொகைகள், உள்ளீடு, மதியுரை மற்றும் விரிவாக்கப் பணிகள் என்பனவற்றிற்கான ஏற்பாடுகள் போன்ற ஆதரவுப் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. தனியார் வர்த்தக நாற்று மேடைகளை உருவாக்குவதனையும் ஊக்குவிக்கும் நோக்குடன் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்திச் சபையினால் சலுகை விலைகளில் பல்வேறுபட்ட உள்ளீடுகளும் கிடைக்கச் செய்யப்பட்டன. ஊவா, சப்பிரகமுவா, காலி, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்திச் சங்கங்களை நிறுவுவதற்கான வசதிகளை ஏற்படுத்துமுகமாகப் புதியதொரு யாப்பு வரையப்பட்டது.

தேயிலை சிறு உடைமைகளினதும் அதேபோன்று தனியார் துறையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளினதும் உற்பத்தியாற்றலை முன்னேற்றவும் தாக்கம் மிக்க விரிவாக்கப் பணிகளை மீண்டும் வலுப்படுத்துவதற்கும் நிதி வசதிகளை வழங்கும் பொருட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உதவியளிக்கப்பட்ட தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி செயற்றிட்டம் *1990* இல் தொடங்கப்பட்டது. *1990* இல் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின்கீழ் மீள்நடுகைக்காக *2,438* உரிமங்கள் வழங்கப்பட்டன. *1990* இல் இத்திட்டத்தின்கீழ் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு *624* எக்டேயர்களாக விளங்கி இலக்கினை *64* எக்டேயர்களால் விஞ்சியது.

1990 இல் தயாரிக்கப்பட்ட தேயிலையின் சராசரி உற்பத்திச் செலவு கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 57.65 இற்கு ஏறத்தாழ 16 சதவீதத்தினால் உயர்ந்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வதிகரிப்பிற்கு வளமாக்கி விலைகள் கூலிச் செலவு என்பனவற்றின் உயர்வே பெருமளவிற்குக் காரணமாகும்.

அதிகரித்த கேள்வி, குறைவடைந்த உலக தேயிலை நிரம்பல் என்பனவற்றின் விளைவாக சார்புரீதியில் செழிப்பான சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1989 இல் முன்னேற்றமடைந்த கொழும்பு ஏலங்களில் தேயிலை விலைகள் 1990 இல் மேலும் வலுவடைந்தன. கொழும்பு ஏலங்களில் அனைத்து தேயிலைகளினதும் சராசரி மொத்த விலை 1989 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 54.61 இலிருந்து 1990 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 70.97 இற்கு 30 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. தேயிலையின் சராசரி (க.ஏ.பெ.) ஏற்றுமதி விலையும் 1990 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 91.78 இற்கு 37 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

1990 யூலையில் தேயிலை மீதான பெறுமான விகித விற்பனை வரியின் அடிமட்ட விலை கிலோக்கிறாமொன்றிற்கான ஆகக்கூடிய அளவீடான ரூ. 15 உடன் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 60 இலிருந்து கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 65 இற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டது. 1990 ஏப்பிறலிலிருந்து தேயிலைத் தீர்வை கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 1.50 இனால் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 3.50 இற்கு அதிகரிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பில் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 1 கொண்ட தொகை தேயிலைக்கான சமநிலைப்படுத்தும் நிதியத்திற்கான மூலவளங்களைப் பெருக்குவதற்காகக் குறித்தொதுக்கப்பட்டது.

## இறப்பர்

1990 இல் இறப்பர் உற்பத்தி 1,140 இலட்சம் கிலோக்கிறாம்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. இது முன்னைய ஆண்டின் உற்பத்தியிலும் பார்க்க 3 சதவீத அதிகரிப்பினையும் கொண்டிருந்தது. பாலெடுத்தலின் கீழான பரப்பளவில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியினைக் கருத்திற் கொள்கையில், இவ்வுற்பத்தியின் அதிகரித்த மட்டத்திற்கு இவ்வாண்டில் அடையப்பட்ட உயர்ந்த சராசரி விளைச்சலே முழுக் காரணமாக இருந்தது.

இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 1990 இல் 390 இலட்சம் கிலோக்கிறாம்களை உற்பத்தி செய்த அரசதுறையில் முழுமையாகப் பிரதிபலிக்கப்பட்டதுடன் இவ்வதிகரிப்பு முன்னைய ஆண்டினைவிட 13 சதவீதம் அதிகமானதாகும். 1990 இல் மொத்த இறப்பர் உற்பத்தியில் 34 சதவீதத்திற்கு வகைகூறும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் வெளியீடு ஒவ்வொன்றும் 13 சதவீதத்தினால் முறையே 170 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கும், 220 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கும் அதிகரித்தன. சராசரி விளைச்சலில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டபோதும் தனியார்துறையின் உற்பத்தி 750 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து பாலெடுத்தலின் கீழான பரப்பளவு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைவதைப் பிரதிபலித்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 779 கிலோக்கிறாம்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சார்புரீதியான சாதகமான வானிலை நிலைமைகளும், உள்நாட்டுக் குழப்பங்கள் குறைவடைந்தமை என்பனவற்றின் விளைவாகப் பாலெடுக்கும் நாட்கள் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். 1990 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனங்களுக்கும் சொந்தமான பெருந்தோட்டங்களின் சராசரி விளைச்சல் 14 சதவீதத்தினாலும் 16 சதவீதத்தினாலும் முறையே எக்டேயரொன்றிற்கு 998 கிலோக்கிறாம்களுக்கும் 894 கிலோக்கிறாம்களுக்கும் அதிகரித்தது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் உற்பத்தியாற்றலை அதிகரிக்கும் நோக்குடன் உயர்ந்த விளைச்சலைக் கொண்ட பதியங்களைப் பயன்படுத்தி மீள்நடுகை செய்யப்படுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இதற்கிணங்க 1990 இல் அரசதுறைப் பெருந்தோட்டங்களில் பதியம் பிபீ 86 இன் பயிரிடல் இடைநிறுத்தப்பட்டது.

1990 இல் இறப்பரின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்தப் பரப்பு 199,048 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. மக்கள்தோட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களுக்கும் சொந்தமான இணைந்த நிலப்பரப்பு 5க9,560 எக்டேயர்ளுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தனியார் துறையின் கீழான பரப்பு 139,488 எக்டேயர்களுக்குச் சிறிதளவு உயர்வடைந்தது.

1990 இல் பாலெடுத்தலின் கீழான நிலப்பரப்பும் 146,325 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி அரச, தனியார் துறைகள் இரண்டிலும் பதிவு செய்யப்பட்டது. 1990 இல் பாலெடுத்தலின் கீழான மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டினைப்போன்றே பெரும்பாலும் இறப்பர் செய்கையின் கீழான மொத்த நிலப்பரப்பில் 74 சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

1990 இல் இறப்பர் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 21,438 மெற்றிக் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 1 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக் காட்டின. 1990 இல் அரசதுறைக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் வளமாக்கிப் பாவனை 8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதன் மூலம் இறப்பர் துறைக்கான வளமாக்கி வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சி முழுவதும் தனியார் துறையிலேயே ஏற்பட்டதென்பது தெளிவாகின்றது.

1989 இல் குறிப்பிடத்தக்க எழுச்சியைக் காட்டிய மீள் பயிரிடல் நடவடிக்கைகள் 1990 இல் பின்னடைவினைக் கொண்டிருந்தன. இதன் விளைவாக 1990 இல் மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 5,203 எக்டேயர்களுக்கு 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினாலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினாலும் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 31 சதவீதத்தினாலும் 6 சதவீதத்தினாலும் முறையே 754 எக்டேயர்களுக்கும் 864 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சியடைந்தவேளையில் 1990 இல் தனியார்துறை பெருந்தோட்டங்களின் மீளப் பயிரிடல் 3,584 எக்டேயர்களுக்கு 14 சதவீதத்தினால் குறைவடைந்தது. உலக வங்கியினால் உதவியளிக்கப்பட்ட இரண்டாவது சிறு உடைமையாளர் இறப்பர் புத்தாக்க

## அட்டவணை 1.10

## இறப்பர்த்துறை மீதான புள்ளி விபரங்கள் 1988—1990

| அலயம் | | அலகு | 1988 | 1989(அ) | 1990(ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ... | ப. இ. கி. கி. | 122.4 | 110.7 | 114.0 |
| 2. பரப்பளவு | | | | | |
| 2.1. பயிர்ச் செய்கைக்குட்பட்ட | ... | '000 எக்டேயர்கள் | 200.2 | 199.6 | 199.0 |
| 2.2. பால் எடுக்கும் | ... | ,, | 145.5 | 147.3 | 146.3 |
| 3. விளைச்சல் | ... | கி. கி. /எக்டேயர் | 841 | 752 | 779 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் | ... | '000மெ. தொன்கள் | 25.1 | 22.6 | 21.4 |
| 5. மீள் நடுகை | ... | எக்டேயர்கள் | 4,167 | 6,147 | 5,203 |
| 6. விலைகள் | ... | | | | |
| 6.1 ஏற்றுமதிகள் க. ஏ. பெ. | ... | ரூ. / கி. கி | 37.33 | 36.18 | 35.50 |
| 6.2 கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 | ... | ,, | 24.40 | 22.63 | 22.93 |
| 7. உற்பத்திச் செலவு (இ) | ... | ,, | 13.41 | 15.06 | 17 96 |
| 8. ஏற்றுமதிகள் | ... | ப. இ. கி. கி. | 99.3 | 86.0 | 86.8 |
| 9. உள்நாட்டு நுகர்வு | ... | ,, | 19.8 | 21.0 | 23.5 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் | ... | ரூ. ப. இ. | 3,705.9 | 3,112.1 | 3,080.2 |
| | | (சிஎஉ. ப. இ.) | (87) | (67) | (57) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) | ... | | 1.7 | 1.6 | 1.1 |

மூலங்கள்: இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) தனியார்துறையின் தோட்டங்களினதும் சிறு உடைமைகளினதும்உற்பத்திச் செலவின் நிறையேற்றப்பட்ட சராசரி.
(ஈ) பயிர் வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்.

நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1989 இன் 2,354 எக்டேயர்களுக்கெதிராக 1990 இல் 3,015 எக்டேயர்கள் மீளப் பயிரிடப்பட்டன. எனினும் 1990 இல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மீளப் பயிரிடப்பட்ட பரப்பு எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதற்குத் தவறிவிட்டது. இறப்பர் புதிதாகப் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1989 இன் 1,335 எக்டேயர்களிலிருந்து 1990 இல் 1,083 எக்டேயர்களுக்கு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1990 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினால் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 106 எக்டேயர்களுக்கு 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அத்தகைய நிலப்பரப்பு 1989 இன் 223 எக்டேயர்களிலிருந்து 1990 இல் 152 எக்டேயர்களுக்கு 32 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தனியார்துறையினால் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1990 இல் 825 எக்டேயர்களுக்கு 168 எக்டேயர்களினால் அல்லது 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1990 இல் அரசதுறை தனியார்துறை இரண்டினதும் இறப்பரின் உற்பத்திச் செலவு அதிகரித்தமைக்கு வளமாக்கி மற்றும் இரசாயனங்களின் அதிகரித்த விலைகளும் உயர்ந்த கூலிச் செலவுகளுமே முக்கிய காரணங்களாகும். தனியார் துறையின் உற்பத்திச் செலவு 1989 இன் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 15.06 இலிருந்து 1990 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 17.96 இற்கு 19 சதவீதத்தினால் அதிகரித்தது.

இவ்வாண்டில் முக்கிய இறப்பர் நுகர்வு நாடுகளில் காணப்பட்ட குறைந்த கேள்வி மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற முக்கியமாக இறப்பரை உற்பத்தி செய்யும் தென்கிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட அதிகரித்த நிரம்ப லுடன் இணைந்து அனைத்து பன்னாட்டு ஏல நிலையங்களினது சந்தை நிலைமை களிலும் மந்த நிலையைத் தோற்றுவித்து இறப்பர் விலைகளில் பாதகமானதொரு தாக்கத்தினை ஏற்படுத்தியது. கொழும்பு ஏலத்தில் ஆர்.எஸ்.எஸ். I இன் சராசரி விலை 1989 இல் கிலோக்கிறாமிற்கு ரூ. 22.63 இலிருந்து 1990 இல் கிலோக்கிறா மொன்றிற்கு ரூ. 22.93 இற்கு மிகச் சிறிதளவில் உயர்வடைந்தது. மாறாக, ஆர்.எஸ்.எஸ். II இனதும் லேட்டெக்ஸ் IX இனதும் சராசரி விலைகள் முன்னைய ஆண்டில் நிலவிய விலைகளைவிட முறையே கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 21.36 இற்கும் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 28.88 இற்கும் சிறிதளவால் வீழ்ச்சி யடைந்தன. 1990 இல் அனைத்து வகை இறப்பரினதும் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 35.50 இற்கு 2 சதவீதத்தினால் சிறிதளவிற்கு வீழ்ச்சியடைந்தது.

1990 இல் இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 235 இலட்சம் கிலோக் கிறாம்களாக விளங்கி 12 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்ததுடன் இவ்வாண்டின் மொத்த இறப்பர் உற்பத்தியில் 21 சதவீதத்திற்கும் வகை கூறியது.

தாழ்ந்த இறப்பர் விலைகள் நிலவியபோதும் சிறந்த உற்பத்தியாளர் இலா பத்தினை உறுதிப்படுத்துவதற்காக 1990 செத்தெம்பரில் இறப்பர் ஏற்றுமதித் தீர்வை கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. இதன்படி ஏற்றுமதித் தீர்வைக்கான அடிமட்ட விலை 1990 செத்தெம்பரில் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 17 இலிருந்து ரூ. 21 இற்கு உயர்த்தப்பட்டது.

1990 இல் தனியார் பெருந்தோட்டங்கள் மற்றும் சிறு உடைமையாளர் களின் மீள் நடுகைக்கான உதவுதொகை எக்டேயருக்கு ரூ. 32,098 இலிருந்து ரூ. 37,068 இற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் புதிய பயிரிடலுக்கான உதவு தொகை எக்டேயருக்கு ரூ. 30,250 இலிருந்து எக்டேயருக்கு ரூ. 35,829 இற்கு உயர்த்தப்பட்டது. அத்துடன் எவரொருவரின் பெருந்தோட்டம் பயிரிடப் பட்டு ஐந்து ஆண்டுகளுக்கிடையில் முதிர்ச்சி நிலையினை அடைகின்றதோ அப் பயிர்ச்செய்கையாளருக்கு எக்டேயரொன்றிற்கு ரூ. 2,471 கொண்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றினை வழங்குவதும் உதவுதொகைத் திட்டத்தின்கீழ் அறிமுகப் படுத்தப்பட்டது.

இறப்பர் துறையில் கொள்கை இணைப்பினை உறுதிப்படுத்துமுகமாக 1990 இல் இறப்பர் சபை அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. இச் சபையின் முக்கிய நோக்கம் இறப்பர் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களிடை யேயும் சிறந்த ஒத்துழைப்பினை உருவாக்குவதற்கு ஒரு மன்றத்தினை ஏற்படுத்து வதேயாகும்.

தெங்கு

1989 இல் 28 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்த தெங்கு உற்பத்தி 1990 இல் 25,230 இலட்சம் காய்களுக்கு 2 சதவீதத்தினால் சிறிதளவு மட்டும் அதிகரித்தது. தெங்குத்துறையின் இத் தாழ்ந்த செயலாற்றம் ஆண்டின் இரண்டாம் மூன்றாம் காலாண்டுகளில் நிலவிய கடும் வரட்சி நிலைமைகளின் முக்கிய வெளிப்பாடாகும். இவ்வரட்சி புத்தளம், குருநாகல் மாவட்டங்களின் வட பகுதிகளிலும், அம்பாந்தோட்டை மாவட்டத் திலுள்ள பெருந்தொகையான தென்னந் தோட்டங்களுக்கும் குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தியது.

எண்ணெய் உற்பத்திகளுக்குச் சமனான காய்களின் அளவு 1989 இன் 5,970 இலட்சம் காய்களிலிருந்து 1990 இல் 5,980 இலட்சம் காய்களுக்கு மிகச் சிறிதளவு அதிகரிப்பினை மட்டும் பதிவு செய்தது. குறைந்த பன்னாட்டு விலை களும் உற்பத்தியாளர் இலாபங்களும் எண்ணெய் உற்பத்தியின்மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. மாறாக, தேங்காய்த் துருவல் உற்பத்திக்குச் சமனான காய்களின் அளவு 1989 உடன் ஒப்பிடுகையில் 1990 இல் 3,740 இலட்சம் காய்களுக்கு அதிகரித்து 17 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு உயர்வினைப் பதிவு செய்தது. இதற்கு இலங்கைத் தேங்காய்த் துருவலுக்குக் காணப்பட்ட உயர்ந்த பன்னாட்டுக் கேள்வியே முக்கிய காரணமாகும். உலர்த்திய தேங்காயின் ஏற்றுமதிகளுக்குச் சமனான காய்கள் 1989 இன் 410 இலட்சம் காய்களிலிருந்து 1990 இல் 310 இலட்சம் காய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. உடன் காய்களின் ஏற்றுமதிகள் 1989 இன் 160 இலட்சத்திலிருந்து 1990 இல் 190 இலட்சம் காய்களுக்கு அதிகரித்தது. 1990 இல் உடன் காய்களின் உள்நாட்டு நுகர்வு ஏறத்தாழ 15,000 இலட்சம் காய்களென மதிப்பிடப்பட்டதுடன் மொத் தக் காய் உற்பத்தியில் 59 சதவீதத்திற்கு வகை கூறியது.

1990 இல் தெங்குத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 22,793 மெற்றிக் தொன்களுக்கு 41 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. வளமாக்கியின் அதிகரிக்கப்பட்ட விலை இத்துறையில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் அள வின்மீது பெரும் செல்வாக்கினைக் கொண்டிருந்தது. தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை 1990 இல் 37 வளமாக்கிக் களஞ்சியங்களைப் பேணியதுடன் ஏறத்தாழ 2,929 மெற்றிக் தொன் வளமாக்கியையும் பகிர்ந்தளித்தது. முன்னைய ஆண்டு டன் ஒப்பிடுகையில் இது 21 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை 1989 இன் 12.6 இலட்சங்களுக்கெதிராக 1990 இல் பயிர்ச்செய்கையாளர்களுக்கு 12.3 இலட்சம் நாற்றுக் கன்றுகளை வழங்கியது.

1990 இல் பல்வேறுபட்ட உதவுதொகைத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப் பட்ட பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் முன்னேற்றத்தினைக் காட்டின. 1990 இல் புத்தாக்கம் செய்யப்பட்ட தெங்கு நிலங்களின் பரப்பு 3,206 எக்டேயர்களுக்கு 3 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இதன் பேரில் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகை ஏறத்தாழ ரூ. 70 இலட்சங்களுக்கு 15 சதவீதத்தினால் உயர் வடைந்தது. கீழ்ப் பயிரிடப்பட்ட மற்றும் மீளப் பயிரிடப்பட்டவை இரண்டும் இணைந்த பரப்பு ஏறத்தாழ 41 சதவீதத்தினால் 2,724 எக்டேயர்களுக்குக் கணிசமாக அதிகரித்தது. இதன் பேரில் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகை ரூ. 220 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் உதவுதொகைகளைவிட

12 சதவீதம் உயர்வானதாக விளங்கியது. 1990 இல் புதிதாகத் தெங்கு பயிரிடப்பட்ட பரப்பு 2,042 எக்டேயர்களுக்கு 285 எக்டேயர்களினால் அல்லது 16 சத வீதத்தினால் அதிகரித்தது. எனினும் அதன் பேரில் செலுத்தப்பட்ட மொத்த உதவு தொகை 1989 இல் 155 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 158 இலட்சங்களுக்கு மிகச் சிறிதளவால் மாத்திரமே உயர்வடைந்தது. கொக்கோ, கோப்பி, மிளகு, கால்நடைக்கான புல்வகை போன்ற பயிர்களின் மூலம் இடைப்பயிரிடப்பட்ட தெங்கு நிலங்களின் மொத்தப் பரப்பு 1989 இன் 175 எக்டேயர்களிலிருந்து 1990 இல் 149 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.11

தெங்குத்துறை மீதான புள்ளி விபரங்கள் 1988—1990

| விடயம் | அலகு | 1988 | 1989 | 1990(அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) .. | ப. இ. காய்களில் | 1,936 | 2,484 | 2,523 |
| 1.1. தேங்காய்த் துருவல் .. | ப. இ. காய்களில் (இ) | 155 | 319 | 374 |
| 1.2. தேங்காய் எண்ணெய் .. | ப. இ. காய்களில் (இ) | 276 | 597 | 598 |
| 1.3. உலர்த்திய தேங்காய் (ஈ) . | ப. இ. காய்களில் (இ) | 29 | 41 | 31 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் | 12 | 16 | 19 |
| 1.5. உள்நாட்டு தேங்காய் நுகர்வு (உ) .. | ப. இ. காய்களில் | 1,449 | 1,477 | 1,500 |
| 2. சராசரி ஏற்றுமதிவிலை (க. வ. பெ.) (ஊ) | காய்க்கு ரூபா | 4.00 | 3.36 | 3.63 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 42.0 | 38.5 | 22·8 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 0.81 | 0.85 | 1.11 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல் (எ) ... | எக்டேயர்கள் | 2,049 | 1,933 | 2,724 |
| 6. புதிய பயிரிடல் (எ) ... | எக்டேயர்கள் | 1,153 | 1,757 | 2,042 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ப. இ. ரூபா | 1,539 | 2,865 | 2,783 |
| | (சிஎஉ ப. இ.) | (36) | (62) | (51) |
| 7.1. உள்ளீட்டு உற்பத்திகள் (ஊ) ... | ப. இ. ரூபா | 896 | 1,920 | 1,843 |
| | (சிஎஉ. ப. இ.) | (21) | (42) | (34) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 643 | 945 | 941 |
| | (சிஎஉ. ப. இ.) | (15) | (20) | (17) |
| 8. மொ. உ. உற்டத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஏ) ... | | 2.7 | 2.8 | 1.9 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகம்..

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டாது.)

(இ) தேங்காய்க்குச் சமனான ஒரு — மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்.
— மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
— மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்.

(ஈ) ஏற்றுமதிகள் மட்டும்.

(உ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 90 காய்களென்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பயன்பாட்டினைத் தவிர.

(ஊ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டுமே.

(எ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(ஏ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

உச்ச பருவகாலங்களில் உடன் காய்களுக்கான பண்ணை விலைகளிலும் மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளுக்கான ஏற்றுமதி விலைகளிலும் ஏற்படும் கணிசமான வீழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தெங்கு அபி விருத்தி மேலாண்மைச் சபை 1990 இல் தெங்கிற்கான விலை சமநிலைப்படுத்தும் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை, வரையறுக்கப்பட்ட பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனத்தினூடாக இத்திட்டத்தைத் தொழிற்படுத்தியதுடன் சந்தையில் ஒரு மெற்றிக் தொன் தேங்காயெண்ணெய்க்கான கீழ்மட்ட விலையை ரூ. 15,500 ஆக நிர்ணயித்ததன் மூலம் சந்தையில் தலையீட்டையும் மேற்கொண்டது. தெங்கு அபிவிருத்தி, மேலாண்மைச் சபை இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ. 500 இலட்சம் கொண்டதொரு தொகை சமநிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபைக்கு வழங்கப்பட்டது.

நவீன உணவு பதனிடல் தொழிற்சாலைகளின் தரத்திற்குத் தற்பொழுதுள்ள தேங்காய்த் துருவல் தொழிற்சாலைகளையும் தரமுயர்த்தும் பொருட்டுத் தேங் காய்த் துருவல் ஆலையாளர்கள் நவீன பொறித் தொகுதிகளையும் கருவிகளையும் இறக்குமதி செய்வதனை இயலச் செய்வதற்காகத் தெங்கு அபிவிருத்தி மேலாண் மைச் சபை 1990 இல் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது.

மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளினதும் சராசரி ஏற்றுமதி க.ஏ.பெ. விலை 1989 இல் காயொன்றிற்கு ரூ. 3.36 இலிருந்து 1990 இல் ரூ. 3.63 இற்கு அதிகரித்தமைக்குத் தேங்காய்த் துருவலினால் அடையப்பட்ட உயர்ந்த விலைகளே பெருமளவிற்குக் காரணமாகும். அதேவேளை 1990 இல் சராசரி உற்பத்திச் செலவு காயொன்றிற்கு ரூ. 1.11 ஆக விளங்கி 1989 இல் அறிவிக்கப்பட்ட காயொன்றிற்கான ரூ. 0.85 கொண்ட விலையுடன் ஒப்பிடுகை யில் ஏறத்தாழ 31 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க உயர்வினைக் காட்டிய மைக்கு உயர்ந்த வளமாக்கி விலைகளும் அதிகரித்த கூலிச் செலவுகளுமே முக்கிய காரணமாகும்.

## ஏனைய வேளாண்மை உற்பத்திகள்

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நறுமணப் பயிர்களையும் குடிபானப் பயிர்களையும் உள்ளடக்கியுள்ளன. இப் பயிர்கள் முக்கியமாகப் பெரும்பாலானவை வீட்டுத் தோட்டங்களிலும் சிறு உடைமைகளிலும் கலப்புப் பயிர்களாக வளர்கின்றன. எனவே இப்பயிர்களின் கீழான பரப்பளவு அதேபோன்று அவற்றின் உற்பத்தி என்பனவற்றின் மீதான சரியான தரவுகளைப் பெறுவது கடினமானதொன்றாகும். எனினும் இப் பயிர் களின் உற்பத்தியில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்ற உண்மை யின் அடிப்படையில் ஏற்றுமதி அளவுகள் உற்பத்திகளுக்கான பதிலிகளாகப் பயன்படுத்தப்பட்டன. உள்நாட்டு நுகர்வும், இருப்பு மாற்றங்களும் மிகச் சிறிதள வாகவே இருக்கும் எனக் கருதப்பட்டமையின் காரணமாகச் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி மதிப்பீடுகள் ஓரளவிற்குத் தற்காலிகமானவையே.

கராம்பு, கொக்கோ தவிர்ந்த முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களில் பெரும் பாலானவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் வீழ்ச்சியடைந்துள்ளமையை ஏற்றுமதித் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. 1990 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட கராம்பின் அளவு முன்னைய ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட 312 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2,137 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து ஆறு மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1990 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட கொக்கோவின் அளவும் 168 மெற்றிக் தொன்களுக்கு 39 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் 1990 இல் ஏலக்காய், சாதிக்காயும் சாதிப்பத்திரியும், கோப்பி, மிளகு என்பனவற்றின் ஏற்றுமதி அளவுகள் முறையே 73 சதவீதம், 31 சதவீதம், 28 சதவீதம், 17 சத வீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவு செய்து உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளை எடுத்துக் காட்டின.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் 7,734 மெற்றிக் தொன்களுக்கு உயர்ந்து 38 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தன. வளமாக்கி வட்ட செயல்முறை வகை நிகழ்ச்சித்திட்ட நடைமுறைப்படுத்தலே வளமாக்கிப் பயன்பாட்டின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணிபோல் தோன்றுகின்றது. இவ் வாண்டில் வளமாக்கி வட்ட செயல் முறை விளக்க நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் 1,876 மெற்றிக் தொன் வளமாக்கியைச் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறைக்கு வழங்கியது.

ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின் படி 1990 இல் சாதிக்காய் தவிர்ந்த முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களின் கீழுள்ள பரப்பளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் மிளகின் கீழான பரப்பளவு 9,069 எக்டேயர்களுக்கு 9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.

ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான உதவித் திட்டங்களின் தொழிற்பாடுகளை 1990 இலும் தொடர்ந்தது. ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்கள் உதவித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை நடவடிக் கைகளின் செயலாற்றம் 1990 இல் பெரும்பாலும் கலப்புற்றுக் காணப்பட்டது. ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்கள் உதவித் திட்டத்தின்கீழ் 1990 இல் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்தப் பரப்பு 53 எக்டேயர்களுக்கு 56 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் புதிதாகப் பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பு 903 எக் டேயர்களுக்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1990 இல் மிளகு, கோப்பி, கராம்பு என்பன புதிதாகப் பயிரிடப்பட்ட பரப்பளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 3 எக்டேயர்களாலும், 66 எக்டேயர்களாலும், 11 எக்டேயர்களாலும் வீழ்ச்சியடைந்தது. கறுவா, கொக்கோ என்பன தொடர்பாக புத்தாக்கம் செய்யப்பட்ட பரப்பளவு முறையே 83 எக்டேயர்கள், 15 எக்டேயர் கள் கொண்ட வீழ்ச்சிகளைப் பதிவு செய்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 1989 இன் இறுதியில் தொடங்கப்பட்ட மத்திய நில நீண்டகாலப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் 1990 இல் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. இத்திட்டம் மிளகு, சாதிக்காய், கொக்கோ, கோப்பி, ஏலக்காய் போன்ற முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களில் பெரும்பாலானவற்றை உள்ளடக்கி நீண்டகாலப் பயிர்களின் வர்த்தக உற்பத்தியை மேம்படுத்துவதனையும் சந்தை வசதிகளை முன்னேற்றுவதனையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

நெல்

1989 இல் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்த நெல் உற்பத்தி 1990 இல் குறிப்பிடத்தக்களவில் மீட்சியடைந்தது. 1990 இல் நெல் உற்பத்தி 25.4 இலட்சம் மெற்றிக் தொன்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டதுடன் (1,220 இலட்சம் புசல் நெல்) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது. எனினும் 1990 இன் உற்பத்தி 1985 இன் பதிவு செய்யப்பட்ட உச்ச மட்ட உற்பத்தியான 26.6 இலட்சம் மெற்றிக் தொன்களிலும் பார்க்க 5 சதவீதம் குறைவானதாகும். 1989/90 பெரும்போகம் 1990 சிறுபோகம் இரண்டினதும் உயர்ந்த நெல் உற்பத்தியே உற்பத்தியின் அதிகரிப்பிற்கு உதவின. உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குச் சாதகமான வானிலை நிலைமைகளும் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் திருந்தியமையுமே முக்கிய காரணமாகும். இவை விதைக்கப்பட்ட நிலப்பரப்பும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பும் கணிசமானளவில் விரிவடையவும், சராசரி விளைச்சலில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்படவும் வழியமைத்தன.

1989/90 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 16.5 இலட்சம் மெற்றிக் தொன்களாக (790 இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்டதுடன் முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 23 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இவ்வுற்பத்தியில் அதிகரிப்பு அடையப்பட்டமைக்கு விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு அதிகரித்தமை, சார்புரீதியில் குறைந்த பயிர் இழப்புக்கள், உயர்ந்த சராசரி விளைச்சல் என்பன முக்கிய காரணிகளாகும். பெரும்போகத்தில் அநுராதபுரம் மாவட்டம் மிக உயர்ந்த முழுமையான உற்பத்தி அதிகரிப்பான 73,354 மெற்றிக் தொன்களைப் பதிவு செய்தது.

1990 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 8.9 இலட்சம் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டதுடன் (430 இலட்சம் புசல்) இது முன்னைய சிறுபோகத்தின் உற்பத்தியினைவிட 24 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பாக இருந்தது. எக்டேயருக்கான சராசரி விளைச்சலில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டபோதும் அவ்வதிகரிப்பு அடையப்பட்டமைக்குச் சாதகமான வானிலை நிலைமைகளின் விளைவாக மொத்தமாக விதைக்கப்பட்ட நிலமும் அறுவடை செய்யப்பட்ட நிலமும் கணிசமாக அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். 1990 சிறுபோகத்தின் உற்பத்தியில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் குருநாகல், அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை மாவட்டங்களும், மகாவலி 'எச்'பிரதேசங்களும் ஏறத்தாழ 67 சதவீதத்திற்கு வகை கூறின.

*அட்டவணை 1.12*

## நெல்துறை மீதான புள்ளி விபரங்கள் 1989—1990

| விடயம் | அலகு | 1989 | | | 1990 (அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு .. | '000 எக்டேயர்கள் | 469 | 258 | 727 | 531 | 326 | 857 |
| வளமாக்கி வழங்கல்கள்(ஆ) | '000மெ.தொன்கள் | 105 | 51 | 156 | 98 | 46 | 144 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 119 | 88 | 207 | 206 | 155 | 361 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 440 | 250 | 690 | 519 | 309 | 828 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) .. | கி. கிறாம்கள் | 3,429 | 3,279 | 3,374 | 3,564 | 3,265 | 3,452 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 392 | 220 | 612 | 462 | 273 | 735 |
| உற்பத்தி .. | '000மெ. தொன்கள் ('000புசல்கள்) | 1,342 (64,330) | 721 (34,550) | 2,063 (98,880) | 1,647 (78,924) | 891 (42,681) | 2,538 (121,605) |
| உ.வி.தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை (ஈ) ... | '000மெ. தொன்கள் | 05 | — | 05 | 31 | — | (உ) 31 |
| அரிசி இறக்குமதி ... (நெல்லிற்குச் சமன்) ... | '000மெ. தொன்கள் ,, | — (—) | — (—) | 316 (451) | — (—) | --- (—) | 172 (246) |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை உணவு, கூட்டுறவு அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும் கலண்டர் ஆண்டினதும் வளமாக்கி வழங்கல்கள் அடிப்படையில் மாறுபட்டதாகும். பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்றோபர்-மாசசு/ஏப்பிறல்) சிறுபோகத்தையும் (ஏப்பிறல்/மே-ஓகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும்போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

(ஈ) ஓகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோக-அறுவடை கொள்வனவு செய்யப்பட்டவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

(உ) 1990 மார்ச்சு 23 இலிருந்து 1990 மே 7 வரை நெற்சந்தைப்படுத்தும் சபையினால் உத்தரவாத விலைத்திட்டத்திற்கு மேலாக கொள்வனவு செய்யப்பட்ட நெல்லையும் உள்ளடக்கும்.

1990 இல் எக்டேயரொன்றிற்கான ஆண்டுச் சராசரி விளைச்சல் 3,452 கிலோக்கிறாம்கள் என மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் விளைச்சலைவிட 2 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்புமாகும். முன்னைய ஆண்டின் தொடர்பான பருவகாலங்களின் விளைச்சலுடன் ஒப்பிடுகையில் 1989/90 பெரும் போகத்தில் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 3,564 கிலோக்கிறாம்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 1990 சிறுபோகத்தின் சராசரி விளைச்

சல் 3,265 கிலோக்கிறாம்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. உடவளவைப் பிரதேசம் இரு பருவகாலங்களிலும் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக மிக உயர்ந்த சராசரி விளைச்சலைப் பதிவு செய்தது. பெரும்போகத்தில் அனைத்து நெல் உற்பத்திப் பிரதேசங்களும் அதாவது முக்கிய, சிறிய. மழை நீரை நம்பிய பிரதேசங்கள் உயர்ந்த சராசரி விளைச்சலையும் முக்கிய நீர்ப்பாசனத்தின் கீழுள்ள பிரதேசங்கள் 8 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த விளைச்சலையும் பதிவு செய்தன. சராசரி விளைச்சலில் ஏற்பட்ட அதிகரிப்பு, நெல் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான பிரதேசங்களில் சாதகமான வானிலை நிலைமைகளும் திருந்திய பாதுகாப்பு நிலைமைகளும் வழமைக்குத் திரும்பியதன் காரணமாக நெல் உற்பத்தி பரந்த அடிப்படையில் மீட்சி பெற்றமையைக் காட்டுகின்றது.

1990 இல் நெல் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 856,708 எக்டேயர்களுக்கு 18 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தமைக்கு இரு பருவ காலங்களிலும் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளே முக்கிய காரண மாகும். விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் ஏற்பட்ட மீட்சி 1989 வரட்சி நிலைமைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குருநாகல், அநுராதபுரம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலேயே மிக முனைப்பாகக் காணப்பட்டது. 1989/90 பெரும்போகத்திலும் 1990 சிறுபோகத்திலும் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு முறையே 530,726 எக்டேயர்களுக்கும், 325,982 எக்டேயர்களுக்கும் 13 சதவீதத்தினாலும், 26 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.

1990 இல் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 828,248 எக்டேயர்களுக்கு அதிகரித்து 20 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1989/90 பெரும்போகத்திலும் 1990 சிறுபோகத்திலும் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு முறையே 18 சதவீதத்தினாலும், 24 சதவீதத்தினாலும் உயர்வடைந்தது. விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பிற்கும் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பிற்கும் இடையிலுள்ள வேறுபாடான பயிர் இழப்புக்களின் அளவு 1989/90 பெரும் போகத்தில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 2 சதவீதமாக மட்டுமே இருந்தது. முன்னைய பெரும்போகத்தின் ஒப்பிடத்தக்க வீதம் 6 சதவீதமாக இருந்தது. மாறாகச் சிறுபோகத்தின் பயிர் இழப்பு வீதம் முன்னைய சிறுபோகத்தில் பதிவு செய்யப்பட்ட 3 சதவீதத்திற்கெதிராக 5 சதவீதமாகச் சிறிதளவு உயர்ந்து காணப்பட்டது. சார்புரீதியில் குறைந்த பயிர் இழப்புச் சம்பவங்களும் 1990 இன் உயர்ந்தமட்ட நெல் உற்பத்திக்குக் காரணமாக இருந்திருக்கின்றன.

1990 பயிர்ச்செய்கை ஆண்டில் நெல் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 143,565 மெற்றிக் தொன்களாக விளங்கியதென வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு மதிப்பிட்டுள்ளது. இது முன்னைய ஆண்டிற்கான வளமாக்கி வழங்கல்களைவிட 8 சதவீதம் கொண்ட மேலுமொரு வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது. பெரும்போகத்திற்கான வழங்கல்கள் 7 சதவீதத்தாலும், சிறுபோகத்திற்கானவை 10 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. 1990 இன் ஆரம்பத்தில் உதவுதொகை நீக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட வளமாக்கி விலைகளின் அதிகரிப்பு 1990 சிறுபோகத்தின் வழங்கல்களின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. விதைக்கப்பட்ட நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காணப்பட்டபோதும் வளமாக்கி வழங்கல்கள் குறைவாக விளங்கி விதைக்கப்பட்ட எக்டேயர் ஒன்றிற்குப் பாவித்த வளமாக்கியின் அளவைத் தாக்கமடையச் செய்தன. விதைக்கப்பட்ட எக்டேயர் ஒன்றிற்கு வழங்கப்பட்ட சராசரி வளமாக்கியின் அளவு 1989/90 பெரும்போகத்தில் 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் சிறுபோகத்தில் அது 29 சதவீதம் கொண்ட கணிசமானளவினால் வீழ்ச்சியடைந்தது.

1989 இல் 95 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த நெற் சந்தைப்படுத்தும் சபையின் நெற் கொள்வனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் ஆறு மடங்கால் அதிகரித்துக் காணப்பட்டு 31,000 மெற்றிக் தொன்களாக விளங்கின. கொள்வனவுகளில் ஏற்பட்ட இம்முன்னேற்றம் 1990 மாச்சு 23 இலிருந்து 1990 மே 07 வரை உத்தரவாத விலைக்கு மேலான போட்டித் தன்மையான விலைகளில் நெற் கொள்வனவு செய்வதென நெற் சந்தைப்படுத்தும் சபையினால் எடுக்கப்பட்ட முடிவின் விளைவாகும். 1990 இல் உத்தரவாத விலைத் திட்டத்திற்கு மேலாக நெற் சந்தைப்படுத்தும் சபையினால் செய்யப்பட்ட நெற் கொள்வனவுகள் 28,000 மெற்றிக் தொன்கள் அல்லது ஆண்டின் மொத்தக் கொள்வனவுகளின் 90 சதவீதமாக இருந்தன.

1990 பெப்புருவரியில் நெல்லின் உத்தரவாத விலை புசலொன்றுக்கு ரூ. 80 இலிருந்து புசலொன்றுக்கு ரூ. 110 இற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டது. 1989 இல் இருந்ததைப்போல் 1990 முழுவதும் நெல்லின் வெளிச்சந்தை விலைகள் உத்தரவாத விலைக்கு மிகவும் கூடுதலாகவே விளங்கின. முன்னைய ஆண்டினுடன் ஒப்பிடுகையில் 1990 இல் கொழும்புச் சந்தையில் அரிசியின் சராசரி சில்லறை விலை 23 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து கிலோக்கிறாமுக்கு ரூ. 18.44 ஆக விளங்கியது.

உயர்ந்த நெல் உற்பத்தியினைப் பிரதிபலிக்கும் வகையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட, நுகர்வுக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த அரிசி (விரயம், விதை நெல் தேவைகளுக்குச் சீராக்கம் செய்தபின்) 15 இலட்சம் மெற்றிக் தொன்களாக விளங்கியது. உள்நாட்டு அரிசித் தேவையில் இது 1989 இல் பெற்ற 73 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 88 சதவீதமாக விளங்கியது. உள்நாட்டுத் தேவையின் பற்றாக்குறை பெரும்பாலும் இறக்குமதி மூலம் ஈடுசெய்யப்பட்டதுடன் 1990 இல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு 172,000 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

**சீனி**

1989 இல் 53,839 மெற்றிக் தொன்களுக்குச் சிறிதளவால் உயர்வடைந்த சீனி உற்பத்தி 1990 இல் மேலும் 6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து 57,171 மெற்றிக் தொன்களாக விளங்கியது. முன்னேற்றகரமான பாதுகாப்பு நிலைமைகள், போதியளவு மழை வீழ்ச்சி, வெளிப் பயிர்ச் செய்கையாளர்களின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளின் விரிவாக்கம் என்பன 1990 இன் உயர்ந்த உற்பத்தி மட்டத்திற்குப் பங்களிப்பைச் செலுத்திய முக்கிய காரணிகளாகும். கந்தளாய், செவனகல, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகள் உற்பத்தி முன்னேற்றத்திற்கு வேறுபட்ட அளவுகளிலேனும் பங்களிப்புச் செய்தன. 1989 இல் உற்பத்தியில் 62 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்த கந்தளாய்த் தொழிற்சாலையின் உற்பத்தி 1990 இல் மேலும் 3 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து 2,364 மெற்றிக் தொன்களாக விளங்கியது. 1989 இல் உற்பத்தியில் 19 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த செவனகல தொழிற்சாலையின் உற்பத்தி 1989 இன் 8,928 மெற்றிக் தொன்களிலிருந்து 1990 இல் 9,648 மெற்றிக் தொன்களாக விளங்கி 8 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. கந்தளாய், செவனகல ஆகிய இரு தொழிற்சாலைகளிலும் ஆலையிடுவதற்குக் குறைந்தளவான கரும்பே கிடைத்த போதிலும் குறிப்பாக 1990 இல் சீனி பெறும் வீதத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் உற்பத்தி அதிகரித்தது. 1989 உற்பத்தியில் 5 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்த பெல்வத்தை தொழிற்சாலையின் உற்பத்தி 1990 இல் 16 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்து 33,020 மெற்றிக் தொன்களாக விளங்கியது. உற்பத்தியில் ஏற்பட்ட இந்த வளர்ச்சியானது பெருமளவிற்கு பெருந்தொகையான கரும்புக் கொள்வனவினால் ஆலையிடுவதற்கு அதிகரித்தளவில் கரும்பு கிடைத்தமையால் ஏற்பட்டதெனக் கூறமுடியும். 1989 இன் மொத்தச் சீனி உற்பத்தியில் 53 சதவீதத்திற்கு வகைகூறிய பெல்வத்தை தொழிற்சாலை 1990 இல் அதன் பங்கினை 58 சதவீதத்திற்கு அதிகரித்துத் தனது நிலையினை மேலும் வலுப்படுத்திக் கொண்டது. தொடர்ச்சியான மூன்று ஆண்டுகள் அதிகரிப்பின் பின்னர் 1990 இல் இங்குரான தொழிற்சாலையின் உற்பத்தி 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 12,139 மெற்றிக் தொன்களாக விளங்கியது. முக்கியமாகக் காணி ஒதுக்கீட்டாளர்கள் சிலரால் காணிகள் கைவிடப்படல், தீயினாலும் அத்துடன் காட்டு விலங்குகளினாலும் பயிர் சேதமாக்கப்படல் என்பனவற்றின் விளைவாக ஆலையிடுவதற்குக் குறைந்தளவான கரும்பு கிடைத்தமை இந்தத் தொழிற்சாலையின் மிகக் குறைந்த செயலாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்ததாகத் தோன்றுகின்றது.

1990 இல், வரையறுக்கப்பட்ட இலங்கை சீனிக் கூட்டுநிலையம் மற்றும் வரையறுக்கப்பட்ட பெல்வத்த சீனிக் கூட்டுநிலையம் என்பனவற்றின் தொழிற்சாலைகள் தங்களது காணி ஒதுக்கீட்டாளர்களுடன் கூட்டாக முகாமை செய்த கரும்புப் பயிர்ச் செய்கையின் கீழான (முளைவிடுதல் உட்பட) மொத்த நிலப் பரப்பு 10,501 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இங்குரான, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகளின் கரும்புப் பயிர்ச் செய்கையின் கீழான நிரப்பரப்பு 1990 இல் முறையே 8 சதவீதத்தாலும், 2 சதவீதத்தாலும் 2,438 எக்டேயர்களுக்கும், 4,590 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாகக் கந்தளாய், செவனகல தொழிற்சாலைகளின் கீழான பரப்பு 1990 இல் முறையே 12 சதவீதத்தாலும், 5 சதவீதத்தாலும் 1,510 எக்டேயர்களுக்கும், 1,963 எக்டேயர்களுக்கும் அதிகரித்தது.

## அட்டவணை 1.13

### சீனி உற்பத்தித்துறை மீதான புள்ளி விபரங்கள் 1989-1990

| விடயம் | அலகு | இங்குரான சீனித் தொழிற்சாலை | | கந்தளாய் சீனித் தொழிற்சாலை | | செவனகல சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1989 | 1990 (ஆ) | 1989 | 1990 (ஆ) | 1989 | 1990 (ஆ) | 1989 | 1990 (ஆ) | 1989 | 1990 (ஆ) |
| 1. கரும்பிற்குட்பட்ட நிலப்பரப்பு (நாட்டப்படும் முளை தோன்றியதுமான) (அ) | எக்டேயர்கள் | 2,644 | 2,438 | 1,345 | 1,510 | 1,868 | 1,963 | 4,700 | 4,590 | 10,557 | 10,501 |
| 2. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு(அ) . | எக்டேயர்கள் | 2,409 | 2,050 | 906 | 1,044 | 1,440 | 1,091 | 3,944 | 3,899 | 8,699 | 8,084 |
| 3. அறுவடை செய்யப்பட்ட கரும்பு (அ) ... | மெ.தொன்கள் | 132,201 | 120,401 | 38,179 | 35,808 | 117,174 | 107,072 | 210,822 | 189,903 | 498,376 | 453,184 |
| 4. சராசரி விளைச்சல் (அ) ... | மெ. தொன்கள்/ எக்டேயர்கள் | 54.88 | 58.73 | 42.14 | 34.30 | 81.37 | 98.14 | 53.45 | 48.71 | 57.29 | 56.06 |
| 5. தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு ... | மெ.தொன்கள் | 54,079 | 55,866 | — | 13 | 737 | 1.244 | 133,153 | 249,464 | 187,969 | 306,587 |
| 6. உற்பத்தி செய்யப்பட்ட சீனி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) ... | மெ.தொன்கள் | 14,256 | 12,139 | 2,305 | 2,364 | 8,928 | 9,648 | 28,350 | 33,020 | 53,839 | 57,171 |
| 7. சீனி பெறப்பட்ட வீதம் ... | % | 7.65 | 6.88 | 6.04 | 6.60 | 7.57 | 8.91 | 8.24 | 7.52 | 7.84 | 7.52 |

(அ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.
(ஆ) தற்காலிகமானவை,

மூலம்: இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட பெல்வத்தைச் சீனிக் கூட்டு நிலையம்.

வரையறுக்கப்பட்ட இலங்கைச் சீனிக் கூட்டு நிலையம் வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கூட்டு நிலையம் ஆகியவற்றினால் கரும்பு அறுவடை செய்யப் பட்ட மொத்த நிலப்பரப்பு 1990 இல் 7 சதவீதத்தால் 8,084 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. செவனகல, இங்குரான, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலை களினால் 1990 இல் அறுவடை செய்யப்பட்ட பரப்புகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 24 சதவீதத்தாலும், 15 சதவீதத்தாலும், 01 சத வீதத்தாலும் 1,091 எக்டேயர்களுக்கும், 2,050 எக்டேயர்களுக்கும், 3,899 எக்டேயர்ஷளுக்கும் வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டில் கந்தளாய்த் தொழிற்சாலை யினால் கரும்பு அறுவடை செய்யப்பட்ட பரப்பு 15 சதவீதத்தால் 1,044 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. அனைத்து சீனித் தொழிற்சாலைகளினதும் சராசரி சீனி பெறும் வீதம் 1989 இன் 7.84 சதவீதத்திலிருந்து 1990 இல் 7.52 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது குறிப்பாக இங்குரான, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகளின் சீனி பெறும் வீதம் முறையே 6.88 சதவீதத்திற்கும், 7.52 சதவீதத்திற்கும் வீழ்ச்சியுற்றதன் விளைவால் ஏற்பட்டதாகும். எனினும், கந்தளாய், செவனகல ஆகிய தொழிற்சாலைகளின் சீனி பெறும் வீதம் முறையே 6.60 சதவீதத்திற்கும், 8.91 சதவீதத்திற்கும் அதிகரித்தது.

1990இல் அனைத்து தொழிற்சாலைகளாலும் அறுவடை செய்யப்பட்ட கரும் பின் மொத்த அளவு, சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி அத்துடன் குறைவான பரப்பு அறுவடை செய்யப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 9 சதவீதத்தால் 453,184 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. எல்லாத் தொழிற்சாலை களும் இவ்வீழ்ச்சியில் பங்கு கொண்டிருந்தன. 1990 இல் இங்குரான, செவனகல ஆகிய இவ்விரு தொழிற்சாலைகளிலும் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு ஒவ்வொன்றும் 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் கந்தளாய், பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகளின் அளவு முறையே 6 சதவீதத்தினாலும், 10 சதவீதத்தினாலும் குறைவடைந்தது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் தனிப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களால் தொழிற் சாலைக்கு வழங்கப்பட்ட கரும்பின் அளவு 306,587 மெற்றிக் தொன்களாக விளங்கி 63 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1990 இல் பெல் வத்தை தொழிற்சாலையால் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் அளவு 87 சதவீதத்தினால் 249,464 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து, நான்கு தொழிற் சாலைகளினதும் மொத்தக் கொள்வனவில் ஏறக்குறைய 81 சதவீதத்திற்கு வகை கூறியது.

வெளிப் பயிர்ச்செய்கையாளர்களின் கரும்புப் பயிர்ச் செய்கையினை மேம் படுத்துவதற்கான தேவை மற்றும் அதிகரித்த வாய்ப்புக்கள் என்பனவற்றினைக் கருத்திற் கொண்டு செவனகல, இங்குரான ஆகிய தொழிற்சாலைகள் தற்போது நடைமுறையிலுள்ள வெளிப்பயிர்ச் செய்கையாளர் திட்டங்களின் விரிவாக்கத் திற்குக் கூடிய முன்னுரிமை அளித்தன. இவ்வாண்டில் கந்தளாயிலும் ஒரு வெளிப் பயிர்ச்செய்கையாளர் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானம் எடுக் கப்பட்டது. கரும்பின் தரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சீனி பெறும் வீதங் களைக் கருத்திற் கொண்டு கந்தளாய், இங்குரான ஆகிய தொழிற்சாலைகள் புதிய கரும்பின் கொள்வனவு விலைகளைத் திருத்தியமைத்தன.

**சிறு உணவுப் பயிர்கள்**

நீர்ப்பாசனப் பிரதேசங்களில் செறிவாகப் பயிரிடப்படுகின்ற கூடிய பெறுமதியினைக் கொண்ட பயிர்களான உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் ஆகிய சில பயிர்கள் தவிர்ந்த அநேகமான சிறு உணவுப் பயிர்கள் மழைநீரின் உதவியுடன் சிறிய உடைமைகளில் அல்லது வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்படுகின்றன. சிறு உணவுப் பயிர்களின் இவ்வகையான பயிரிடப்படும் தன்மையானது பயிர் செய்யப்பட்ட பரப்பு, அவற்றின் உற்பத்தி என்பன தொடர்பான நம்பத்தகு தரவுகளைச் சேகரிப்பதனைக் கடினமாக்குகின்றது. ஆகவே சிறு உணவுப் பயிர்களின் செயலாற்றம் தொடர்பான எந்தவொரு பகுப்பாய்வும் தற்காலிக மதிப்பீடுகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி அநேகமான சிறு உணவுப் பயிர்கள் முன்னைய ஆண்டில் காணப்பட்ட தாழ்ந்த உற்பத்தி மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1990 இல் கணிசமான முன்னேற்றத்தைப் பதிவு செய்தன. 1990 இல் சோயா அவரை, எள்ளு என்பனவற்றின் உற்பத்தி இரண்டு மடங்கிற்கும் மேல் அதிகரித்த வேளையில் உழுந்து, சோளம் என்பனவற்றின் உற்பத்தி முறையே 69 சதவீத, 58 சதவீத கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது. உற்பத்தியின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு உற்பத்திப் பிரதேசங்களில் காணப்பட்ட முன்னேற்றகரமான பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் சாதகமான கால நிலைகள் என்பனவற்றின் விளைவாக அதியுயர் சராசரி விளைச்சல் பெறப்பட்டமை அத்துடன் இப்பயிர்களின் கீழான நிலப் பரப்பு அதிகரித்தமை என்பனவற்றை முக்கிய காரணங்களாகக் குறிப்பிடலாம். 1990 இல், குறிப்பாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாகப் பாசிப்பயறு, தட்டைப்பயறு என்பனவற்றின் உற்பத்தி கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

1990 இல் உயர் பெறுமதி கொண்ட சிறு உணவுப் பயிர் வகைகளில் மிளகாய், பெரிய வெங்காயம் என்பனவற்றின் உற்பத்தி முறையே 75 சதவீதமும், 70 சதவீதமும் கொண்ட கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்த வேளையில் சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி வீழ்ச்சியைக் காட்டியது. 1990 இல் சின்ன வெங்காயத்தின் குறைந்த உற்பத்தி செயலாற்றத்திற்குச் சராசரி விளைச்சல் மற்றும் பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பரப்பு என்பனவற்றில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. 1990 இல் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தபோதிலும் குறிப்பாகக் குறைந்த சராசரி விளைச்சலின் விளைவாக உற்பத்தி ஏறக்குறைய 2 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

அநேகமாக முக்கிய சிறு உணவுப் பயிர்கள் இரண்டு பருவகாலங்களிலும் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தன. எனினும் தட்டைப் பயறு, குரக்கன், உழுந்து என்பனவற்றின் உற்பத்தியில் முழுமையான அதிகரிப்பு 1989/90 பெரும்போகத்தில் அவதானிக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கிற்கு மாறாகச் சிறு உணவுப் பயிர்கள் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1990 இல் 6 சதவீதத்தினால் 26,971 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.14

## துணை உணவுப் பயிர்களுக்கான அடிமட்ட விலைத்திட்டம்

(கிலோக்கிறாமொன்றிற்கு ரூபா)

| பயிர் | 1990 சனவரி 1 இலிருந்து 1990 திசெம்பர் 31 வரை |
|---|---|
| சோளம் ... ... ... ... | 4.25 |
| குரக்கன் .. ... ... .. | 5.00 |
| நிலக்கடலை (கோதுடன்) ... ... ... | 8.15 |
| சோயா அவரை ... ... ... ... | 7.30 |
| எள்ளு | |
| கறுப்பு ... ... ... ... | 8.00 |
| வெள்ளை ... ... ... ... | 9.90 |
| மிளகாய் (செத்தல்) | |
| மிளகாய் I ... ... ... ... | 32.00 |
| மிளகாய் II ... ... ... ... | 30.00 |
| தட்டைப் பயறு ... ... ... ... | 9.00 |
| பாசிப்பயறு ... ... ... ... | 12.00 |
| உழுந்து ... ... ... ... | 7.50 |

மூலம்: வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு.

நெல் சந்தைப்படுத்தும் சபையினால் தொழிற்படுத்தப்பட்ட அடிமட்ட விலைத்திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட ஒன்பது சிறு உணவுப் பயிர்கள் தொடர்பாக 1990 ஆம் ஆண்டிலும் நடைமுறையிலிருந்தது. இவ்வாண்டில் கறுப்பு எள்ளு தவிர்ந்த ஏனைய அனைத்துப் பயிர்களினதும் அடிமட்ட விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன.

நெல் சந்தைப்படுத்தும் சபையின் சோளம், சோயா அவரை என்பனவற்றின் கொள்வனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் முறையே 91 சதவீதத்தினாலும், 32 சதவீதத்தினாலும் 916 மெற்றிக் தொன்களுக்கும், 154 மெற்றிக் தொன்களுக்கும் வீழ்ச்சியடைந்தன. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பாசிப்பயறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் 1,139 மெற்றிக் தொன்களாக விளங்கி ஏறக்குறைய மும்மடங்கு அதிகரிப்பினைக் காட்டியது. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினால் 1990 இல் உள்ளூர்ச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட பெரிய வெங்காயம் 93 சதவீதத்தால் 92 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1990 இல் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் 31,447 மெற்றிக் தொன்களாக விளங்கி 1989 ஆம் ஆண்டைப் பார்க்கிலும் 32 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1990 இல் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மைசூர்ப் பருப்பு, செத்தல் மிளகாய் என்பவற்றின் அளவுகள் முறையே 25 சதவீதத்தினாலும், 45 சதவீதத்தினாலும், 33,665 மெற்றிக் தொன்களுக்கும், 3,488 மெற்றிக் தொன்களுக்கும் வீழ்ச்சி அடைந்தன.

**மீனும் கால்நடையும்**

1990 இல் கடல் நீர் மீன்பிடித் துறையின் உற்பத்தி 145,798 மெற்றிக் தொன்களெனக் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சு தற்காலிக மாக மதிப்பிட்டுள்ளது. இது முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய 12 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. கடல்நீர் மீன்பிடித் துறையின் உற்பத்தியில் ஏறக்குறைய 92 சதவீதத்திற்கு வகைகூறிய கரையோர மீன்பிடித் துணைத் துறையின் உற்பத்தி ஏறக்குறைய 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் ஆழ்கடல் மற்றும் கரைகடந்த மீன்பிடித்துணைத் துறையின் உற்பத்தி 43 சதவீதத்தால் அதிகரித்தது. 1990 இன் பின்னரைப் பகுதியில் மீன்பிடி நட வடிக்கைகளைக் கட்டுப்படுத்திய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவிய அமைதி யற்ற நிலைமைகளின் காரணமாகக் கரையோர மீன்பிடித்துணைத்துறையின் உற் பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது. முன்னைய ஆண்டினைப் போன்றே 1990 இல் மொத்த மீன் உற்பத்தியின் முக்கிய பங்கிற்குத் தனியார்துறை வகைகூறியவேளையில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் ஏறக்குறைய 2,000 மெற்றிக் தொன்களை மாத்திரமே வழங்கியது.

நன்னீர் மீன்பிடித் துணைத் துறைக்கு அரசினால் அளிக்கப்பட்ட ஆதரவு நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து நன்னீர் மீன்பிடித் துறையின் உற்பத்திச் செயலாற்றம் தொடர்பான தரவுகளைக் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங் கள் அமைச்சு திரட்டியிருக்கவில்லை. எனினும் ஆண்டின் முன்னரைப் பகுதிக்குக் கிடைக்கத்தக்கதாயுள்ள தரவுகளை முன்னைய ஆண்டின் முன்னரைப் பகுதியின் தரவுகளுடன் ஒப்பிடுகையில் நன்னீர் மீன்பிடித் துறையின் மீன் உற்பத்தி 17,866 மெற்றிக் தொன்களுக்கு ஏறக்குறைய 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந் துள்ளது.

மேற்குக் கரை மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் நடைமுறைப் படுத்தல் 1990 இலும் தொடர்ந்தது. கிழக்கு மாகாணத்தில் நிலவிய அமைதி யின்மையின் காரணமாகக் கிழக்குக் கரை மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டத் தின் வேலைகள் 1990 இல் கடுமையான பாதிப்பிற்குள்ளாகின.இதன் விளைவாக இவ்வாண்டில் இச் செயற்றிட்டத்திற்கான செலவினம் இவ்வாண்டிற்கான ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 48 சத வீதமாக விளங்கி ரூ. 95,420 ஆக மாத்திரமே காணப்பட்டது.

அபிவிருத்தி நடவடிக்கையில் மீன்பிடி சமூகத்தினர் அதிகளவில் பங்கு பற்றுவதனை உறுதிப்படுத்தும் வகையில் 1990 இல் 64,813 மொத்த உறுப் புரிமையுடன் 739 மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. உதவு தொகைத் திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் படகுகள், இயந்திரங்கள், உந்திகள் என்பன வழங்கப்பட்டன. 1990 இல் கடல் நீர் மீன்பிடித் துறைக்குப் பகிர்ந் தளிக்கப்பட்ட உதவுதொகைகளின் மொத்தத் தொகை 1989 இன் ரூ. 140 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 110 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் பல்வேறுவகையான உதவுதொகைத் திட்டங்களின் கீழ் 254 படகுகள், 377 மரபுவழிக் கலங்கள், 483 உந்திகள் என்பன கடல் நீர் மீன்பிடித்துறைக்கு வழங்கப்பட்டன.

### அட்டவணை 1.15

### மீன் உற்பத்தி 1986—1990

(மெற்றிக் தொன்களில்)

| துணைத்துறை | | 1986 | 1987 | 1988 | 1989 | 1990(அ) |
|---|---|---|---|---|---|---|
| கரையோர | ... | 144,266 | 149,278 | 155,099 | 157,411 | 134,132 |
| ஆழ்கடலும் கரைக்கு அப்பாலும் | ... | 3,400 | 4,259 | 4,425 | 8,155 | 11,666 |
| உள்நாட்டு | ... | 35,390 | 36,465 | 38,012 | 39,720 | வி.கி.(ஆ) |
| மொத்தம் | ... | 183,056 | 190,002 | 197,536 | 205,286 | 145,798(இ) |

மூலம்: கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவளங்கள் அமைச்சு.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) நன்னீர், மீன்பிடித்துணைத்துறைக்கான அரச ஆதரவு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபின் 1990 யூலையிலிருந்து நன்னீர் மீன்பிடித்துணைத்துறைக்கான தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லை.

(இ) நன்னீர் மீன்பிடித்துணைத்துறையின் மீன் உற்பத்தி நீங்கலாக.

விலங்கு உற்பத்தி விலங்கு நலத் திணைக்களம் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை என்பன தேசிய கால்நடைகளின் தொகையினை அதிகரித்தல், விலங்கு இனப்பெருக்கல் பணிகளைப் பலப்படுத்தல் என்பனவற்றிற்கான தமது உதவியளித்தல் விரிவாக்கல் பணிகள் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. இலங்கை—மேற்கு சேர்மனி ஆட்டுப்பண்ணை அபிவிருத்தித் திட்டம் 1990 யூனில் பூர்த்தி செய்யப்பட்ட வேளையில் இலங்கை—ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம் இவ்வாண்டில் நடைமுறையிலிருந்தது.

குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி 1990 இல் பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) 2,880 இலட்சம் இலீட்டர்களாக விளங்கியதோடு முன்னைய ஆண்டைவிட 21 சதவீதம் அதிகரித்திருந்தது. மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா கம்பனி லிமிட்டெட்டினால் (மில்கோ) 640 இலட்சம் இலீட்டர் பாலினைச் சேகரிக்கக்கூடியதாயிருந்ததுடன் இது 1989 இனை விட 5 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சேகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருமளவிற்கு 1990 இன் சார்புரீதியான குறைந்த செயலாற்றத்தில் பிரதிபலித்தது. அதிகரித்த உற்பத்திச் செலவினைக் கருத்திற்கொண்டு 1990 யூனில் மில்கோ லிமிட்டெட் உடன்பாலின் கொள்வனவு விலையை இலீற்றர் ஒன்றுக்கு ஏறத்தாழ 80 சதத்தினால் அதிகரித்தது.

குடிமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின் படி முட்டை உற்பத்தி 8,180 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் உற்பத்தி யுடன் ஒப்பிடுகையில் 2 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

கிடைக்கத்தக்க தரவுகளின்படி சிலோன் ஒயில்ஸ் அன்ட் பெட்ஸ் லிமிட்டெட், பிரிட்டிஸ் சிலோன் கோப்பரேசன் லங்கா லிமிட்டெட், சிலோன் கிரெயின் எலிவேட்டர்ஸ் லிமிட்டெட் என்பனவற்றின் கூட்டான விலங்குத்தீன் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் 6 சதவீதத்தால் 157,597 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது.

**வளமாக்கி**

1989 இல் ஏறக்குறைய 1 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்த பல்வேறு பயிர்த்துறைகளுக்கான வளமாக்கி வழங்கல்கள் 1990 இல் 18 சத வீதத்தால் 429,455 மெற்றிக் தொன்களுக்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. தேயிலை, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பயிர்த்துறை களுக்குமான வளமாக்கி வழங்கல்கள் வீழ்ச்சியடைந்தன. அதிகூடிய பங்கான 39 சதவீதத்திற்கு வகைகூறிய நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 29 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சி அடைந்தன. 1990 சனவரியில் வளமாக்கி உதவுதொகை நீக்கப்பட்டமை உயர்வடைந்த பன்னாட்டு விலைகள் என்பனவற்றின் விளைவாக வளமாக்கி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வள மாக்கி வழங்கலின் வீழ்ச்சிக்குப் பெரும்பாலும் பங்களிப்புச் செய்திருக்கலாம்.

அட்டவணை 1.16

**பயிர்களின் படியான வளமாக்கி வழங்கல்கள் 1987–1990**

’000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1987 | 1988 | 1989 | 1990 (அ) |
|---|---|---|---|---|
| 1. நெல் ... .. | 217.1 | 226.2 | 238.1 | 169.2 |
| 2. தேயிலை ... .. | 136.7 | 138.0 | 127.9 | 134.3 |
| 3. இறப்பர் ... .. | 23.2 | 25.1 | 22.6 | 21.4 |
| 4. தெங்கு ... .. | 42.2 | 42.0 | 38.5 | 22.8 |
| 5. சிறு உணவுப் பயிர்கள் ... .. | 22.2 | 26.1 | 28.7 | 27.0 |
| 6. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ... .. | 3.2 | 4.7 | 5.6 | 7.7 |
| 7. ஏனையவை ... .. | 60.7 | 63.1 | 60.9 | 47.1 |
| மொத்தம் ... .. | 505.3 | 525.2 | 522.3 | 429.5 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: தேசிய வளமாக்கிச் செயலகம்.

அதிகரித்த வளமாக்கி விலைகள் வேளாண்மையாளர்களின் மீது ஏற்படுத்தும் பாதகமான தாக்கத்தினைக் குறைக்கும் நோக்குடன் நெல்லிற்கான வளமாக்கி விதந்துரைப்புக்கள் 1990 இல் வேளாண்மைத் திணைக்களத்தினால் திருத்தி யமைக்கப்பட்டு வளமாக்கிக் கலவைகளுக்குப் பதிலாகக் கலப்பற்ற வளமாக்கி களின் பாவனை விதந்துரைக்கப்பட்டது.

அரச, மற்றும் தனியார் துறை வளமாக்கி மொத்த விற்பனையாளர்களி னால் வழங்கப்பட்ட வளமாக்கியின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் முறையே 17 சதவீதத்தாலும், 20 சதவீதத்தாலும் 348,088 மெற்றிக் தொன்களுக்கும், 81,367 மெற்றிக் தொன்களுக்கும் குறிப்பிடத் தக்களவில் வீழ்ச்சியடைந்தது.

தேசிய வளமாக்கிச் செயலகத்தின் தகவலின்படி 1990 இல் இறக்குமதி செய்யப்பட்ட வளமாக்கியின் மொத்தத் தொகை 507,626 மெற்றிக் தொன் களாக விளங்கி 1989 இன் இறக்குமதிகளைவிட 39 சதவீதம் கொண்ட குறிப் பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தது. கொழும்பு கமர்சியல் பேர்டிலை சர்ஸ் லிமிட்டெட், அங்லோ—ஏசியன் (பேர்டிலைசர்ஸ்) லிமிட்டெட் என்பன தவிர்ந்த ஏனைய அனைத்து இறக்குமதியாளர்களும் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்தனர்.

அட்டவணை 1.17

மொத்த விற்பனையாளர்களின் வளமாக்கி வழங்கல்கள் 1989 — 1990

| துறை | 1989 | | 1990 (அ) | | அளவின் சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| | அளவு (மெற்றிக் தொன்) | % | அளவு (மெற்றிக் தொன்) | % | |
| 1. அரசதுறை .. | 420,926 | 81 | 348,088 | 81 | — 17.3 |
| 1.1 இலங்கை வளமாக்கிக்கூட்டுத்தாபனம் | 232,648 | 45 | 189,770 | 44 | — 18.4 |
| 1.2. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை .. | 105,325 | 20 | 98,512 | 23 | — 6.5 |
| 1.3. வரையறுக்கப்பட்ட வளமாக்கி கொழும்பு கொம்மர்சியல் .. | 82,953 | 16 | 59,806 | 14 | — 27.9 |
| 2. தனியார் துறை .. | 101,386 | 19 | 81,367 | 19 | — 19.7 |
| 2.1. வரையறுக்கப்பட்ட எ. பவர் அன்ட் கம்பனி .. | 57,071 | 11 | 44,235 | 10 | — 22.5 |
| 2.2. ஏனையவை .. | 44,315 | 08 | 37,132 | 09 | — 16.2 |
| மொத்தம் | 522,312 | 100 | 429,455 | 100 | — 17.8 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : தேசிய வளமாக்கிச் செயலகம்